

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்நேரு, பெருங்குடி மண்டலம், வார்டு–190, துலுக்கானத்தம்மன் கோயில் தெரு மற்றும் சாய்பாலாஜி நகரில் கனமழை மற்றும் மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்ட 1000 நபர்களுக்கு நிவாரணப் பொருட்களை நேற்று (08.12.2023) வழங்கினார். இந்நிகழ்வில், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ், துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், சென்னைக் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், மண்டல கண்காணிப்பு அலுவலர் திருமதி வி.ஆர்.சுப்புலட்சுமி, தெற்கு வட்டார துணை ஆணையர் எம்.பி.அமித், மாமன்ற உறுப்பினர் பி.சிவப்பிரகாசம் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மிக்ஜாம் புயல் காரணமாக ஆவடி தொகுதிக்குஉட்பட்ட திருநின்றவூர் ஈசா ஏரியில் உள்ள மழை வெள்ள நீரை இயந்திரம் மூலம் வெளியேற்றுவதை முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ முன்னிலையில் வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பார்வையிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் கே.சுரேஷ்குமார் ஏற்பாட்டில் நடுக்குத்தகை ஊராட்சி, நாச்சியார் சத்திரம் பகுதியில் பொது மக்களுக்கு நிவாரண பொருட்கள் மற்றும் உணவு வழங்கினார். உடன் கே.ஜெ. ரமேஷ், ம.ராஜி, மேயர் ஜி.உதயகுமார், நகர மன்ற தலைவர் உஷா ராணி ரவி, டி.தேசிங்கு, தி.வை.இரவி, பா.நரேஷ்குமார், சன்.பிரகாஷ், ஜி.ராஜேந்திரன், ஒன்றிய கவுன்சிலர்கள் யமுனா ரமேஷ், கேட்டரிங் சுரேஷ், என்.லட்சுமி, பொறியாளர் எம்.மோகன், ஜி.சி.சி.கருணாநிதி, ஆர்.செந்தாமரை, அக்னி மாசெ. ராஜேஷ், ஜி.துர்கா பிரசாத், உதயா, ரமேஷ் பக்தவச்சலம், பி.எல்.ஆர்.யோகா, மகேஷ், பாஸ்கர், சிவா, கார்த்தி, ஆதேஷ், ரோசன், உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### பெருங்குடி- ஆலந்தூர் - வளசரவாக்கம் மண்டலங்களில்

# மிக்ஜாம் புயல் பாதிப்பு பகுதிகளில் நிவாரணப் பணிகள் - நல உதவிகள் வழங்கும் பணி!

## அமைச்சர் கே.என்.நேரு ஆய்வு!

சென்னை, டிச.9

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்நேரு பெருநகர சென்னை மாநகராட்சி, பெருங்குடி, ஆலந்தூர், மற்றும் வளசரவாக்கம் மண்டலங்களில் கனமழை மற்றும் மிக்ஜாம் புயல் தாக்கத்தினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் களப்பணி நடவடிக்கைகள், பொதுமக்களுக்கு நிவாரணப் பொருட்கள் மற்றும் உணவு விநியோகம் ஆகியவற்றைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்கள் கனமழை மற்றும் மிக்ஜாம் புயலின் காரணமாக பெருங்குடி மண்டலத்திற்குட்பட்ட வார்டு190, துலுக்காத்தம்மன் கோயில் தெரு மற்றும் சாய்பாலாஜி நகர், ஆலந்தூர் மண்டலத்திற்குட்பட்ட மணப்பாக்கம் ரிவர்வியூ காலனி, வார்டு 156க்குட்பட்ட திருவள்ளுவர் நகர், வளசரவாக்கம் மண்டலத்திற்குட்பட்ட வார்டு151, சுப்பிரமணிசாமி நகர், வார்டு152, அம்பேத்கர் சாலை ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரணப் பணிகள் மற்றும் மீட்பு உள்ளிட்ட களப்பணி நடவடிக்கைகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், துலுக்காத்தம்மன் கோயில் தெரு மற்றும் சாய்பாலாஜி நகரில் கனமழை மற்றும் மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்ட 1000 நபர்களுக்கு பாய், பிஸ்கெட் மற்றும் ரொட்டி பாக்கெட்டுகள், குடிநீர் பாட்டில்கள் உள்ளிட்ட உணவுப் பொருட்களையும் வழங்கினார்.

இந்த ஆய்வில் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்ததாவது:

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 65 நிவாரண முகாம்களில் 14,268 நபர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டுள்ளது. வெள்ளம் பாதித்த பகுதிகளில் வாகனங்களின் மூலம் இதுவரை (08.12.2023) 47,79,222 உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், மாநகராட்சி சார்பில் 1,04,290 ரொட்டி பாக்கெட்டுகள், 7,01,941 குடிநீர் பாட்டில்கள், 8,47,633 பிஸ்கெட் பாக்கெட்டுகள், 51,733 பால் பவுடர் பாக்கெட்டுகள், 14,574 பால் பாக்கெட்டுகள், 61,380 கி.கி. அரிசி மற்றும் 1,739 கி. பருப்பு உள்ளிட்ட உணவுப் பொருட்கள் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 1,512 மரங்கள் விழுந்துள்ளன. அவற்றில் 1,303 மரங்கள் அகற்றப்பட்டுள்ளன. மீதமுள்ள 209 மரங்களை அகற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 22 சுரங்கப் பாதைகளும் தற்பொழுது மழைநீர்த்தேக்கமின்றி போக்குவரத்திற்கு பயன்பாட்டில் உள்ளது. மேலும், பொதுமக்களுக்கு மழைக்கால நோய்கள் ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில், 01.12.2023 முதல் 07.12.2023 வரை நடமாடும் மருத்துவ முகாம்கள் மற்றும் நிலையான மருத்துவ முகாம்கள் என 1,060 மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, 77,663 நபர்களுக்கு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. நேற்று (08.12.2023) 623 இடங்களில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 1,162 மோட்டார் பம்புகள் மழைநீர் வெளியேற்றுவதற்காக தயார்நிலையில் உள்ளது. மழைநீர் தேங்கியிருந்த 363 இடங்களில் மோட்டார் பம்புகள் மூலம் 306 இடங்களில் தேங்கியுள்ள மழைநீர் வெளியேற்றப்பட்டுவிட்டது. மீதமுள்ள 57 இடங்களில் மழைநீர் வெளியேற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் 488 பேருந்து தட சாலைகளில் 67 இடங்களில் மட்டும் மழைநீர்த்தேக்கம் காணப்பட்டது. இவற்றில் 57 இடங்களில் மழைநீர் வெளியேற்றப்பட்டுள்ளது. மீதமுள்ள 5 இடங்களில் மழைநீர் வெளியேற்றும் பணி துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கனமழை மற்றும் மிக்ஜாம் புயலினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்கள், வெளிமாவட்டங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட தூய்மைப் பணியாளர்கள் மூலம் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் வாரியம் மூலமாக மழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நாள்தோறும் குடிநீரானது லாரிகளில் விநியோகிக்கப்பட்டு வருகிறது. 07.12.2023 அன்று 4,227 நடைகளில் 444 லாரிகள் மூலமும், நேற்று (08.12.2023) இதுவரை 4284 நடைகளில் 474 லாரிகள் மூலமும் குடிநீர் விநியோகிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சென்னைக் குடிநீர் வாரியத்தின் மூலம் 333 தெருக்களில் உள்ள கழிவுநீர் மற்றும் மழைநீர்த் தேக்கமானது 160 கழிவுநீர் வாகனங்கள் மூலம் 2,072 நடைகளில் அகற்றப்பட்டுள்ளது. மேலும், மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 07.12.2023 அன்று 324 தெருக்களிலும், நேற்று (08.12.2023) 526 தெருக்களிலும் தேங்கியிருந்த கழிவுநீர் அகற்றப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளில், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் அரவிந்த் ரமேஷ், காரம்பாக்கம் கா. கணபதி, துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், சென்னைக் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், மண்டல கண்காணிப்பு அலுவலர்கள் திருமதி வி.ஆர்.சுப்புலட்சுமி, இ.சுந்தரவல்லி, கமல் கிஷோர், தெற்கு வட்டார துணை ஆணையர் எம்.பி.அமித், மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வெ.ராஜன், மாமன்ற உறுப்பினர் பி. சிவப்பிரகாசம், ச. சங்கர் கணேஷ், திருமதி ச. பாரதி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில்

# மீட்பு நடவடிக்கை - நலஉதவிகள்!

## இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, டிச.9-

மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க் கள் நேரில் சென்று மீட்பு நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியதைத் தொடர்ந்து, எழும்பூர் சட்டமன்ற உறுப்பினரும் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், கடந்த ஐந்து நாட்களாகத் தனது தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளுக்கு நேரில் சென்று, பொதுமக்களின் தேவைகளைக் கேட்டறிந்து, மீட்புநிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்.

**4000 பால் பாக்கெட்டுகள் வழங்கல்!**

இதன் ஒரு பகுதியாக, எழும்பூர் தொகுதிக்குட்பட்ட வார்டு எண்.77, 78 மற்றும் 108ஐச் சேர்ந்த அவ்வைபுரம், அப்பாராவ் கார்டன், பி.கே.காலனி, தட்டான்குளம், முனுசாமி தெரு, காட்டூர் நல்லமுத்து தெரு, சந்தியப்பா தெரு, பச்சையப்பா தெரு, அங்காளம்மன் கோவில் குடிசைப் பகுதி, ருத்ரப்பா தெரு, அய்யாவு தெரு, அஷ்டபுஜம் சாலை, குறவன் குளம் 1, 2 மற்றும் 3வது தெரு, ஆலத்தூர் சுப்பிரமணி தெரு, ஆண்டியப்பன் தெரு, பெரிய தம்பி தெரு, முருகேசன் தெரு, ரங்கையா தெரு, நரசிங்கப் பெருமாள் கோவில் தெரு, குட்டி தெரு, தானா தெரு, வல்லம் பங்காரு தெரு, நம்மாழ்வார் தெரு, ஏ.பி.ரோடு இரண்டாவது லேன், மாணிக்கம் தெரு, காஞ்சிபுரம் முனுசாமி தெரு, வீ.வீ.கோயில் தெரு ஆகிய தெருக்களைச் சேர்ந்த புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு, இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., ஏற்பாட்டில் 4,000 பால் பாக்கெட்டுகளைக் கழகத் தோழர்கள் விநியோகித்தனர்.

# வேலூர் விமான நிலைய விரிவாக்கப் பணிகளை விரைந்து மேற்கொள்வீர்!

## மக்களவையில் கதிர் ஆனந்த் வலியுறுத்தல்!

புதுடெல்லி, டிச.9-

வேலூர் விமான நிலைய விரிவாக்கப் பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி மக்களவையில் விதி எண் 377 கீழ் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் வலியுறுத்தினார்.

வேலூர் விமான நிலையத்தில் DGCA இன் ஆய்வுப் பணிகளை விரைவு படுத்தவும், விரைவில் அதைச் செயல்பாட்டுக்கு கொண்டு வரவும் அரசை அவர் வலியுறுத்தினார்.

இதுகுறித்து பேசியதாவது :-

வேலூர் நாடாளுமன்ற மக்களவைத் தொகுதி மக்களால் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட வேலூர் விமான நிலையத் திட்டம் பல கோடி ரூபாய் செலவழித்தும் இன்னும் நிலுவையில் உள்ளது. அது எப்போது நிறைவேறும்? என்பது தமிழக மக்களின் குறிப்பாக எனது வேலூர் மக்களவைத் தொகுதி மக்களின் மனதில் நீடித்து வரும் ஒரு நியாயமான கேள்வியாக உள்ளது. 2017 இல், UDAN பிராந்திய இணைப்புத் திட்டத்தின் கீழ் தற்போதுள்ள சிறிய விமான நிலையத்தை விமான நிலையமாக விரிவு படுத்தும் திட்டம் அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் வேலூர் விமான நிலைய விரிவாக்கத்திற்கு, 360 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, பணிகள் முழுவீச்சில் துவங்கியது. ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட 700 மீட்டர் நீள ஓடுபாதை 850 மீட்டர் ஓடுபாதையாகப் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

வேலூர் தொகுதியில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களின் பல வருடக் கனவான வேலூர் விமான நிலையம் பயன்பாட்டுக்கு வருதல் எப்போது நிறைவேறும் என்று காத்திருக்கிறார்கள். ஆனால் ஒரு சில இந்திய விமான நிலைய அத்தாரிட்டி அதிகாரிகளின் அலட்சிய அணுகுமுறை மற்றும் டி.ஜி.சி.ஏ. அதிகாரிகளின் நிலுவையில் உள்ள ஆய்வு பணிகள் காரணமாக வேலூர் விமான நிலைய விரிவாக்கப் பணி நிலுவையில் உள்ளதால் விமான நிலையம் இன்னும் செயல்பட இயலவில்லை.



உடான் திட்டத்தின் கீழ் விமான நிலைய இணைப்புக்கு வேலூர் நகரம் தகுதியானதாக இருப்பதற்கு சமூக பொருளாதார ரீதியாக வேலூர் மாநகர் கண்டு வரும் வளர்ச்சி உள்ளது. எனவே வேலூர் விமான நிலையத்தை விரைந்து முடிக்குமாறு அமைச்சருக்கு நான் ஏற்கனவே இப்பிரச்சினையை நாடாளுமன்ற மக்களவையில் எழுப்பியிருந்தேன். இது குறித்து விமானப் போக்குவரத்து அமைச்சருக்கு கடிதமும் எழுதியிருந்தேன்.

பிரதமர், நிதியமைச்சர், சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற, விரிவாக்கப்பட்ட வேலூர் விமான நிலையத்தை விரைந்து அமைப்பதற்கு டி.ஜி.சி.ஏ.வின் ஆய்வை விரைவு படுத்துமாறு அமைச்சரிடம் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

### மாம்பலம் ஆ.சந்திரசேகர் தலைமையில்

# நூல்கள் வெளியீட்டு விழா!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் வெளியிடுகிறார்!

செஞ்சி, டிச. 9-

திருவண்ணாமலை நந்தினி பதிப்பகம் குறிஞ்சி வாசகர் வட்டம் சார்பில் நாளை (10.12.2023) காலை 10 மணியளவில் செஞ்சி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பாராட்டு விழா, நூல்கள் வெளியீட்டு விழா, பாரதி பிறந்த தின விழா என முப்பெரும் விழா நடைபெறுகிறது.

அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர்கள் சங்க அவை முன்னவர் மாம்பலம் ஆ.சந்திரசேகர் தலைமை வகிக்கிறார்.

ந.சண்முகம் வரவேற்கிறார். நே.சிற்றரசு, பெ.சு. விஜயகுமார், ஆர்.பூபதி, மெக்தியார் அலி, கோ.தமிழரசன், துரை திருநாவுக்கரசு முன்னிலை வகிக்கின்றனர்.

நல்லாசிரியர் விருது பெற்ற ஆசிரியர் திருமதி. கே.அல்லியின் இரண்டு நூல்களை அமைச்சர் செஞ்சி மஸ்தான் வெளியிட்டு பேசுகிறார்.

வே.காளிதாஸ், கா. கோபாலகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் பங்கேற்கிறார்கள்.

பூவழகன் நன்றி கூறுகிறார்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதி உட்பட்ட ராகவா நாயுடு குப்பம் பகுதியில் நடைபெற்று வரும் மேம்பால கட்டுமான பணிகள் புயல் மழை காரணமாக பகுதிகள் மழைநீர் செல்வதால் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ நேரில் பார்வையிட்டு கட்டுமான பணிகள் மீண்டும் துரிதப்படுத்த வேண்டும் என்று அதிகாரிகளை கேட்டுக் கொண்டார். அருகில் ஒன்றிய கழகச் செயலாளர் சி.என் சண்முகம், பி.பழனி, வட்டார வளர்ச்சி அலுவலர் கலைச்செல்வி, ஒன்றிய ஒன்றிய குழு துணை தலைவர் திலகவதி ரமேஷ் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ம.கிரண், மற்றும் சித்திக், சிலம்பு பன்னீர்செல்வம், உள்பட பலர் உள்ளனர்.

### சென்னை கிழக்கு 77 அ வட்டம்

# மாவட்ட பிரதிநிதி மா.காந்தியின் தாயார் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, டிச.9-



சென்னை கிழக்கு மாவட்ட பிரதிநிதி மா. காந்தியின் தாயாரும், மறைந்த கழக தோழர் இ. மாரிக்கண்ணு அவர்களின் மனைவியும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்தி எதிர்ப்பு போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்ற 77 (அ) வட்டக் கழகத் தோழர் திருமதி மா.அமராவதி அம்மையார் (வயது 86) அவர்கள் 04-12-2023 அன்று காலை 7:00 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் கழகத் தோழர்கள் திரளாகச் சென்று மறைந்த அமராவதி அம்மையார் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோட்டூர் அ. இராசசேகரன்
### டிசம்பர் 9 (2012)



**மாணவப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு செயல்பட்டவர். கோட்டூர் ஒன்றியச் செயலாளராக இருபது ஆண்டுகளும், திருவாரூர் மாவட்டம் உருவாகியபோது முதல் மாவட்டக் கழகப் பொறுப்பாளராகவும் பின்னர், மாவட்டக் கழகச் செயலாளராகவும், கழக விவசாய அணி இணைச் செயலாளராகவும் பணியாற்றியவர்.**

**மாவட்ட ஊராட்சியின் துணைத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**“இமை கொட்டாமல் இயக்கத்தை வளர்த்த என் இளைய தம்பிகளில் ஒருவர், தங்கமாக விளங்கியவர்” என தலைவர் கலைஞர் அவர்கள், தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.**

தலைமைக் கழகம்
தி.மு.க.